# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association
(பதிவு எண்: 237/84)

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண்.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005

28441286 / 28440938 / 28443601 e-mail: tngeastatecenter@gmail.com / web: www.tngea.org



மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஆ.பெரியசாமி**
**கோ.பழனியம்மாள்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**மு.செல்வராணி**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

துணை பொதுச்செயலாளர்கள்
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**தெ.வாசுகி**

மாநிலச் செயலாளர்கள்
**சா.டானியல் ஜெயசிங்**
**உ.சுமதி**
**ச.ஹேமலதா**
**ஆ.அம்சராஜ்**
**சா.கோதண்டபாணி**
**அ.குபேரன்**


கடித எண்.5/2023 நாள்.15.03.2023

பெறுநர்

**இயக்குநர்**
பட்டு வளர்ச்சித்துறை
அஸ்தம்பட்டி
சேலம்-9

ஐயா,

வணக்கம்.

பொருள் : பட்டு வளர்ச்சித்துறை - தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை ஊழியர் சங்கம் - 7.10.2022 பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பெருந்திரள் முறையீடு - ஒரு நாள் ஊதியப் பிடித்தம் திரும்ப வழங்க வேண்டுதல் - தொடர்பாக

பார்வை :
1. இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை ந.க.எண்.19664/பஅ7/2022, நாள்.20.10.2022
2. அரசு ஆணை நிலை எண்.9, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(கே)துறை,நாள்.02.02.2021.
3. அரசு ஆணை எண்.113, மனித வள மேலாண்மைத்(கே)துறை நாள்.13.10.2022

*****

தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின்படி பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 7.10.2022 அன்று இயக்குநர் (பட்டு வளர்ச்சித்துறை) சேலம் அலுவலகம் முன்பாக பெருந்திரள் முறையீடு இயக்கம் நடைபெற்றது.

அவ்வியக்கத்தில் பட்டு வளர்ச்சித்துறையை சார்ந்த ஊழியர்கள், விடுப்பு எடுத்துக் கொண்டு பெருந்திரள் முறையீடு இயக்கத்தில் மாநிலம் முழுவதுமிருந்து கலந்த கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில் பார்வை-1ல் கண்ட இயக்குநர் (பட்டு வளர்ச்சித்துறை) கடிதத்தில் பெருந்திரள் முறையீடு இயக்கத்தில் கலந்து கொண்ட ஊழியர்களின் ஒரு நாள் ஊதியத்தை பிடித்தம் செய்ய வேண்டும் என சார்நிலை அலுவலகங்களுக்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளதாக தெரிய வருகிறது.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


மேற்கண்ட உத்திரவு முற்றிலும் தொழிற் சங்க நடவடிக்கைக்கு விரோத போக்காகவும், இந்திய அரசியல் அமைப்பு சட்டம் வழங்கிய ஜனநாயக உரிமைகளுக்கு எதிராகவும் உள்ளது. மேலும் எந்த விதமான முன்னறிப்பும் இல்லாமல் அரசு விதிமுறைகளுக்கு முரணாக உள்ளது என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

பார்வை-2ல் கண்ட அரசாணையில் போராட்டக் காலத்தில் கலந்து கொண்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றவியல் வழக்குகளை முற்றிலும் கைவிடப்படும் என அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து பார்வை-3ல் கண்ட அரசு ஆணையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் அரசு ஊழியர், ஆசிரியர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தப் போராட்டக் காலமான 2016, 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் முந்தைய அரசுக்கு எதிராக அரசு ஊழியர்கள் நடத்திய போராட்டக் காலம் மற்றும் தற்காலிகப் பணி நீக்கக் காலம் ஆகியவை பணிக் காலமாக முறைப்படுத்தப்படும் என அறிவிப்பு செய்துள்ளதை தங்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு வருகிறோம்.

மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் ஜனநாயக முறைப்படி தங்களது நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடுகின்ற சங்கங்களை அனுமதிக்க வேண்டும் என கூறியுள்ளார்.

எனவே, ஊழியர் விரோத மற்றும் அரசு விதிமுறைகளுக்கு முரணாக பிறப்பிக்கப்பட்ட உத்திரவினை ரத்து செய்து, பிடித்தம் செய்யப்பட்ட ஒரு நாள் ஊதியத்தை திரும்ப வழங்கிட உரிய உத்திரவுகளை பிறப்பிக்குமாறு இயக்குநர் (பட்டு வளர்ச்சித்துறை) அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்மதிப்புடன்,
தங்கள் நம்பிக்கையுள்ள,

**(மு. அன்பரசு)**
மாநிலத் தலைவர்
செல்.9840187508

**(ஆ. செல்வம்)**
பொதுச் செயலாளர்
செல்.9443930500